IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE,
KATPADI, VELLORE DISTRICT.
C.C.NO.11/2025

DEPOSITION OF WITNESS P.W.6

| | | |
|---|---|---|
| NAME | : | BALAVENKATRAMAN |
| FATHER'S NAME | : | MUNUSAMY |
| VILLAGE | : | VELLORE |
| OCCUPATION | : | SI |
| AGE | : | 59 |

Solemnly affirmed in accordance with the provisions of Section 3 and 4 of the Indian Oaths Act 1969, r/w rule 35 and 36 of Criminal Rules of Practice 2019 of the 17th day of JUNE 2026.

**சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.**

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது வேலூர் கிராமிய காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். இதற்கு முன்பாக கடந்த 13.07.2024 ம் தேதி காலை 09.00 மணிக்கு திருவலம் உதவி ஆய்வாளர் ஆகிய நான் நிலைய பொறுப்பில் இருந்தபோது காட்பாடி தாலுக்கா, ராஜாஜி நகரைச் சேர்ந்த ராஜகிளி மகன் சுந்தரமூர்த்தி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று அதன் தன்மைபடி நிலைய குற்ற எண்.240/2024, சட்டப்பிரிவுகள் 281, 106(1) BNS ன் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். அந்த முதல் தகவல்அறிக்கை **அ.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் முதல் தகவல் அறிக்கையும், புகார் மனுவையும் இணைத்து கனம் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் அனுப்பி வைத்தேன். பின்னர் ஒரு நகலை தன்னுடைய விசாரணைக்கு எடுத்துக் கொண்டு சம்பவம் இடம் சென்று சாட்சிகள் ரஞ்சித்குமார் மற்றும் சசிந்திரன் ஆகியோர் முன்னிலையில் சம்பவம் இடம் மற்றும் சுற்றுப்புறத்தையும் பார்வையிட்டு மாதிரி வரைபடம், பார்வை மகசர் தயார் செய்தேன். அது முறையே **அ.சா.ஆ.4** மற்றும் **அ.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் வேலூர் அடுக்கம்பாறை அரசு மருத்துவமனை சென்று வழக்கில் இறந்து போன லட்சுமி என்பவரின் பிரேதத்தின் மீதான பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்தேன். அந்த பிரேத விசாரணை அறிக்கை **அ.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் சாட்சிகள் சுந்தரமூர்த்தி, அசோகன், பாண்டியன், ராஜ்குமார், குமார், மகேஷ், ரமேஷ், ரஞ்சித்குமார், சசிந்திரன் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் விபத்தில் இறந்து போன லட்சுமி என்பவரின் உடலை உடற்கூராய்வு செய்ய தலைமை காவலர் செந்தில்குமார் என்பவரின் மூலம் வேண்டுகோள் கடிதம் அனுப்பி வைத்தேன். பின்னர் விபத்தில் இறந்து போன லட்சுமி என்பவரின் உடலை வேலூர் அடுக்கம்பாறை மருத்துவமனையில் வைத்து விரேத பரிசோதனை செய்தேன். பிரேத பரிசோதனை செய்த மருத்துவர் கலைச்செல்வி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து உடற்கூராய்வு சான்றிதழ் பெற்றேன். அந்த உடற்கூராய்வு சான்றிதழ் **அ.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் விபத்து ஏற்படுத்திய அரசு பேருந்து (பதிவெண் TN23 N2233) கொண்ட பேருந்தை மோட்டார் வாகன ஆய்வுக்கு உட்படுத்தி விபத்து ஆய்வறிக்கை பெற்றேன். அந்த

மோட்டார் வாகன ஆய்வறிக்கை **அ.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் மோட்டார் வாகன ஆய்வாளர் மாணிக்கம் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.பின்னர் நான் பணிமாறுதல் ஆகி சென்றதால் வழக்கு கோப்பை நிலையம் வைத்து சென்றேன். பின்னர் வழக்க கோப்பபை காவல் ஆய்வாளர் திரு. ஆனந்தன் என்பவர் தன்னுடைய புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு பட்டியல் சாட்சிகள் 1 முதல் 12 வரை விசாரணை செய்ததில் என்னிடம் கூறியதையே அவரிடம் ஆய்வாளரிடம் சொன்னதால் அவர் தனியாக வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. பின்னர் வழக்கின் எதிரி சந்தர் என்பவர் நிலையம் ஆஜரானவரை காரணம் கூறி கைது செய்து தக்க இருநபர் ஜாமீனில் பிணையில் விடுவித்தார்.

பின்னர் வழக்கின் விசாரணை முடித்து எதிரி மீது சட்டப்பிரிவுகள் 281, 106(1) BNS ன் படி 16.12.2024 அன்று குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

அ.சா.1 விபத்தில் இறந்த நபரின் கணவர் என்றால் சரிதான். அ.சா.2 விபத்தில் இறந்த நபரின் மகன் என்றால் சரிதான். அ.சா.5 விபத்தில் இறந்த நபரின் பேரன் என்றால் சரிதான். திருவலம் காவல் நிலையத்திலிருந்து காட்பாடி நீதிமன்றம் 15 கிலோமீட்டர் தூரம் என்றால் சரிதான். திருவலம் காவல் நிலையத்திலிருந்து காட்பாடி நீதிமன்றத்திற்கு ஒரு மணிநேரத்தில் வரலாம் என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை நீதிமன்றத்திற்கு 01.08.2024 அன்று பெறப்பட்டது என்றால் சரிதான். பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடத்தில் சம்பவ இடத்தில் ரத்தக்கறை மற்றும் அரசு பேருந்து இருந்ததாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். மாதிரி வரைபடத்தில் விபத்து நடந்த ரோட்டில் அகலம் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கு அருகே உள்ள நபர்களை யாரையும் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். மாதிரி வரைபடத்தில் சம்பவ இடத்தை தவறாக குறிப்பிட்டு உள்ளோம் என்றால் சரியல்ல. அ.சா.1 தனது சாட்சியத்தில் ரோட்டில் ஓரமாக சென்றதாக குறிப்பிட்டுள்ள நிலையில் என்னுடைய விசாரணையில் தெற்கில் இருந்து வடக்கு நோக்கி குறுக்கே சென்றதாக எனது விசாரணையில் தெரிய வந்தது என்றால் சரிதான். விபத்து ஏற்பட்ட சாலை கிழக்கு மேற்காக உள்ளது என்றால் சரிதான். இறந்த நபர் குறுக்கே சென்றதால் அவருடைய கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். எதிரி சாலை விதிகளை முறையாக பின்பற்றி பேருந்தை இயக்கினார் என்றால் சரியல்ல. அனைத்து ஆவணங்களும் பின்னிட்டு காவல் நிலையத்தில் தயார் செய்தோம் என்றால் சரியல்ல. சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரி மீது தவறான இறுதி அறிக்கை தாகைல் செய்தோம் என்றால் சரியல்ல. எதிரியுடைய கவனக்குறைவு மற்றும் அஜாக்கிரதையால் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல.

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு நேரடியாகச் சொல்லப்பட்டு, அவரால் உடனுக்குடன் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைகள் திருத்தம் செய்யப்பட்டு இன்று 17.06.2026 ஆம் தேதி பகரப்பட்டது.

S K P DILIP BABU

Digitally signed by S K P DILIP BABU

நீதித்துறை நடுவர்,

காட்பாடி.